ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2128/6 - 2019 ජුනි මස 17 වැනි සඳුදා - 2019.06.17

*2128/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 1/ 2005*

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம்**

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 6, 9, 17, 18 மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 204 ஆம் பிரிவின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்.

கொழும்பு,
2019, யூன் 14.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, புலமைச் சொத்து ஒழுங்குவிதி (பாடல்கள் மற்றும் இசை ஆக்கம்) என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப் பின்னர் "பயன்படுத்துநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வானொலி ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு ஒன்று அல்லது நிறுவகம், தொலைக்காட்சி ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு ஒன்று அல்லது நிறுவகம், தொலைத் தொடர்பு சேவை அல்லது தொகுதி வழங்குநர் ஒருவர் உள்ளடங்கலாக, ஆளொருவர் அல்லது ஆட்களின் குழு, இலத்திரனியல், எண்ம தொடர்பாடல், கடத்தல் என்ற வழிவகைகள் மூலம் பாடல் ஒன்றை அல்லது இசை ஆக்கத்தை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை மீள உருவாக்குகின்றவிடத்து அல்லது தொடர்பாடல் செய்கின்றவிடத்து அல்லது களியாட்டம் அல்லது



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வர்த்தக நோக்கங்களுக்காக தொலைபேசி ஊடகத்தில் எண்ம தொழில்நுட்பத்தின் ஏதேனும் இயல்திற மூலத்திற்காக பயன்படுத்துகின்றவிடத்து, அத்தகைய பயன்படுத்துநர் விடயத்திற்கேற்ப அத்தகைய பாடல் அல்லது இசை ஆக்கத்தின் உரிமைகளின் சொந்தக்காரருடன் அல்லது கூட்டுச் சங்கத்துடன் அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய பயன்படுத்துநர் மற்றும் உரிமைகளின் சொந்தக்காரரினால் பரஸ்பரமாக உடன்பட்டவாறானதன் மேல் அரசுரிமைப் பணமாக கொடுப்பனவொன்றைச் செய்வதற்கு எழுத்திலான உடன்படிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளும் நிபந்தனைகளும், இயைபான கொடுப்பனவை வேறுபடுத்துவதற்கு பயன்படுத்துநருடன் கைமாற்றும் உரிமைகளின் சொந்தக்காரரை தடைசெய்தலாகாது.

3. (1) விடயத்திற்கேற்ப உரிமைகளின் சொந்தக்கார அல்லது கூட்டுச் சங்கம், 2 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு யாருக்குச் செலுத்தப்பட வேண்டும் என்பது பற்றி எழுத்தில் பயன்படுத்துநருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய கொடுப்பனவு, உரிமைகளின் சொந்தக்காரருக்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு உரிமைகளின் சொந்தக்காரர் சார்பில் பின்வரும் முறையில் செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) பயன்படுத்துநர் ஒருவர், பாடல் ஒன்றை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை, பாடலொன்றின் வரிகளை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை, பாடலொன்று தொடர்பில் இசை ஆக்கத்தை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை வானொலியில் ஒலிபரப்பும் போது அல்லது தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் போது அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தும் போது ;

(ஆ) பயன்படுத்துநர் ஒருவர், ஏதேனும் சொல்லை சேர்க்காமல் இசை ஆக்கமொன்றை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை ஒலிபரப்பும் போது அல்லது பயன்படுத்தும் போது ;

(இ) பயன்படுத்துநர் ஒருவர் பாடல் வரிகளுடன் அல்லது பாடல்வரிகளின்றி பின்னணி இசையை அல்லது இசைக்கருவி உதவியின்றி சுதிக்கேற்ப பாடுதலை அல்லது அதன் ஏதேனும் கணிசமான பகுதியை ஒலிபரப்பும் போது அல்லது பயன்படுத்தும் போது;

(ஈ) பயன்படுத்துநர் ஒருவர், பாடல் ஒன்றின் படஉருவ அமைப்பொன்றை அமைத்துத் தயாரித்ததன் பின்னர் அத்தகைய படஉருவ அமைப்பை அல்லது அதன் கணிசமான பகுதியொன்றை ஒலிபரப்பும் போது அல்லது தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் போது அல்லது கடத்தும் போது ;

(உ) பயன்படுத்துநர் ஒருவர் சொற்களைச் சேர்க்காமல் இசை ஆக்கமொன்றின் படஉருவ அமைப்பொன்றை அமைத்துத் தயாரித்ததன் பின்னர், அத்தகைய படஉருவ அமைப்பை இசைக்கருவி உதவியின்றி சுதிக்கேற்ப பாடுதலை அல்லது முன்வைப்பை அல்லது அதன் கணிசமான பகுதியொன்றை தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் போது அல்லது கடத்தும் போது.

4. தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் ஒருவராகவிருக்கும் பயன்படுத்துநர் ஒருவர், ஏதேனும் பாடல்வரி சார், பாடல்வரி சாராத, இசைசார்ந்த அல்லது இசை சாராத (இசைக்கருவி உதவியின்றி சுதிக்கேற்ப பாடுதல்) பாடல் ஒன்றினை, பாடல் ஒன்றின் பகுதியை, இசை ஆக்கத்தை, இசை ஆக்கமொன்றின் பகுதியை, வாத்திய இசையொன்றை அல்லது வாத்திய இசையொன்றின் பகுதியை ஏதேனும் எண்ம ஊடகத்தில் ஒலிபரப்பும், தொடர்பாடல் செய்யும் அல்லது கடத்தும் போதெல்லாம், அத்தகைய பயன்படுத்துநர், உடன்படிக்கையின் நியதிகளின்படி விடயத்திற்கேற்ப உரிமைகளின் சொந்தக்காரருக்கு அல்லது கூட்டுச்சங்கத்திற்கு அது தொடர்பில் இயைபான கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்.

5. பதிப்புரிமை ஒன்றினால் பாதுகாக்கப்பட்ட பாடல் ஒன்று, திறமையான தனியாட்களை தெரிவு செய்வதற்கென தொலைக்காட்சி ஊடகம் அல்லது வானொலி ஊடகம் அல்லது வேறு ஏதேனும் எண்ம ஊடக மூலம் ஒன்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் இசை அல்லது பாடல் தொடர்பான போட்டியில் (நேரடிக்காட்சி) எவரேனும் தனியாளினால் பயன்படுத்தப்படுகின்றவிடத்து,-

(அ) முழுமையான பாடல் அத்தகைய நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுதல் ஆகாது என்பதுடன் உரிமைகளின் சொந்தக்காரரின் அல்லது கூட்டுச்சங்கத்தின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி அத்தகைய பாடலின் பாடல் வரிகள், இசை, சொற்கள் அல்லது சந்தங்களுக்கு மாற்றமெதுவும் செய்யப்படுதலும் ஆகாது;

ஆயின், முழுமையான பாடல் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, விடயத்திற்கேற்ப உரிமைகளின் சொந்தக்காரர் அல்லது கூட்டுச்சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டு கோரப்பட்டவாறான கட்டணமொன்று அத்தகைய தனியாளினால் செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின் மேலும், உரிமைகளின் சொந்தக்காரர் அல்லது கூட்டுச் சங்கம், அத்தகைய கொடுப்பனவின்றி முழுமையான பாடலைப் பயன்படுத்துவதற்கு எழுத்தில் அனுமதியளிக்கலாம் ;

(ஆ) உரிமைகளின் சொந்தக்காரரின் உரிய அங்கீகாரம் இன்றி தெரிவு செய்யப்பட்ட பாடலின் வரிகளை அல்லது இசையை மாற்றுதல் அல்லது தெரிவு செய்யப்பட்ட பாடலுக்கு எவையேனும் சொற்களை அல்லது சந்தங்களை சேர்த்தல் ஆகாது.

6. இரண்டிலிருந்து 5 வரையான ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் (இரண்டும் உட்பட) பதிப்புரிமை செய்யப்பட்ட ஆக்கங்களை பகிரங்கமாகப் புரிவதற்கு இலக்கிய, இசை, நாடக மற்றும் ஆடற்கலை ஆக்கங்களை, ஊமைக்கூத்துக்கள், அசையும் படங்கள் மற்றும் வேறு செவிப்புல கட்புல ஆக்கங்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் அசையும் படம் ஒன்றின் அல்லது வேறு செவிப்புல கட்புல ஆக்கத்தின் தனியான பிம்பங்கள் உள்ளடங்கலாக இலக்கிய, இசை நாடக மற்றும் ஆடற்கலை ஆக்கங்கள், ஊமைக்கூத்துக்கள் மற்றும் படவுருவ சித்திரம் சார்ந்த அல்லது சிற்ப ஆக்கங்களின் விடயத்தில் பாதுகாக்கப்பட்ட ஆக்கம் ஒன்றின் பகிரங்க வெளிக்காட்டலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

7. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலேயொழிய, இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

“கூட்டுச் சங்கம்” என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“இசை ஆக்கம்” என்பது, இசையுடன் அல்லது இசையின்றி அது பாடப்படுவதாயினும் சரி அல்லாதாயினும் சரி அல்லது பேசப்படுவதாயினும் சரி அல்லதாயினும் சரி அல்லது புரியப்படுவதாயினும் சரி அல்லாதாயினும் சரி அத்தகைய இசை ஆக்கத்தின் ஏதேனும் சித்திரம் சார்ந்த குறியீட்டை உள்ளடக்குகிறது ;

“தொலைத் தொடர்புச் சேவை வழங்குநர்” என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“தொலைத் தொடர்புத் தொகுதி வழங்குநர்” என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

“ஆக்கம்” என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. 2011, சனவரி 5 ஆந் திகதிய 1687/28 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, புலமைச் சொத்து ஒழுங்குவிதி, அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

06- 711

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.